<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MC. No.13 /2025</u>

RW:1

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஜானகி | க/ பெ. | ரவி |
| கிராமம் | : | கருப்பூர் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | வீட்டு குடித்தனம் | வயது | 47 |

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த மனுவில் தரப்பினர் இல்லை. நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை.அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட

**(1) எதிர்மனுதாரருக்கு அரசு மூலமாக வழங்கப்பட்ட மாற்று திறனாளி சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் எ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

என் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிர்மனுதாரர் வாய்பேசமுடியாதவர் என்பதை தெரிந்துகொண்டுதான் மனுதாரர் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். இருவீட்டார் பேசி

முடிவு செய்து நகை, சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்துவைக்கப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் சொந்தமாக தையல்கடை வைத்துள்ளார் என்றால் இல்லை கூலிக்கு வேலை செய்கிறார். தையல் தொழில் செய்வதற்காக வேண்டி நான் எனது மகனுடன் உதவியாக இருப்பேன் என்றால் சரிதான்.

அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மனுகொடுத்தார் என்றாலும், அதன் விசாரணைக்கு நாங்கள் சென்றோம் என்றாலும் சரிதான். காவல்நிலையத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ சொன்னபோது நானும், எனது மகனும் சேர்ந்து வாழ முடியாது என சொல்லிவிட்டோம் என்றால் சரிதான்.

அதன்பிறகு மனுதாரர் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். எனது பேத்தி ஷாலினி பிறந்தபோது சென்றோம் என்றால் சரிதான். எனது பேத்தியின் பிறந்தநாள் விழா எங்கள் வீட்டில்தான் நடந்தது என்றால் சரிதான்.

எனக்கு சதீஷ் என்ற மற்றொரு மகன் உள்ளார் என்றால் சரிதான். அவருக்கும் திருமணம் நடைபெற்று பிரச்சினையாகி விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து எங்கள் வீட்டில் தான் வாழ்கிறார்கள் என்றால் சரிதான்.

எனது பேத்திக்கும், எனது மருமகளுக்கும் எதிர்மனுதாரரான என் மகன் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் சொந்தமாக தையல் கடை வைத்து நடத்தி வருகிறார் என்றாலும், நான் வழக்கிற்காக கூலி வேலை செய்கிறார் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது மூத்த மகன் சதீஷுக்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்ததது போல் எதிர்மனுதாரருக்கும் இரண்டாவது திருமணம் செய்து வைப்பதற்காக திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது மகனும், மனுதாரரும் சேர்ந்து வாழ்வதில் எனக்கு ஆட்பேசனை இல்லை. மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சத் தொகை கடமைப்பட்டவர் என்றால் இல்லை.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.02.13 18:19:16 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்